## திருப்பத்தூர் மாவட்டம்

# நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, பொதுபணித்துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நகரம், ஒன்றியம், பேரூர் வாரியாக

கீழ்கண்ட தேதிகளில் நடைபெறும் கழக பொது உறுப்பினர்கள் கூட்டங்களை சம்மந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து நடத்திடவும், இக்கூட்டத்தில் நாடளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர், நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் நாள், நகரம், ஒன்றியம், பேரூர், இடம் விவரம் வருமாறு:

| வ.எ. | நாள் | நேரம் | நகரம் / ஒன்றியம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 01.09.24 - ஞாயிறு | காலை 9 மணி | மாதனூர் கிழக்கு ஒன்றியம் | JBR மஹால், மாதனூர் |
| 2 | | காலை 11 மணி | மாதனூர் மத்திய ஒன்றியம் | SS மஹால், பள்ளித் தெரு |
| 3 | | நண்பகல் 12 மணி | மாதனூர் மேற்கு ஒன்றியம் | SVN மஹால், கரும்பூர் |
| 4 | | பிற்பகல் 2 மணி | ஆம்பூர் நகரம் | ஜெகசக்தி மஹால், சான்றோர்குப்பம் |
| 5 | | பிற்பகல் 3.30 மணி | ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் | ஜோதி மஹால், பத்தாப்பேட்டை |
| 6 | | மாலை 4.30 மணி | உதயேந்திரம் பேரூர் | இருதய ஆண்டவர் சமுதாய கூடம், உதயேந்திரம் |
| 7 | 02.09.24 - திங்கள் | காலை 9 மணி | திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | ஸ்ரீ சீனிவாச திருமண மஹால், குரிசிலாப்பட்டு |
| 8 | | காலை 10.30 மணி | ஆலங்காயம் பேரூர் | ஸ்ரீ ராஜலட்சுமி திருமண மண்டபம், ஆலங்காயம் |
| 9 | | காலை 11.30 மணி | ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் | RR மஹால், மேல்நிம்மியம்பட்டு |
| 10 | | பிற்பகல் 12.30 மணி | வாணியம்பாடி நகரம் | KPA பேலஸ், வாணியம்பாடி |
| 11 | | பிற்பகல் 2 மணி | நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் | AN மஹால், திம்மாம்பேட்டை |
| 12 | | பிற்பகல் 3.30 மணி | ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் | லட்சுமி மஹால் மண்டலவாடி |
| 13 | 03.09.24 - செவ்வாய் | காலை 9 மணி | ஜோலார்பேட்டை நகரம் | ஸ்ரீராஜராஜேஸ்வரி மஹால், ஜோலார்பேட்டை |
| 14 | | காலை 10.30 மணி | ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் | மாணிக்கம் மஹால், தாமலேரிமுத்தூர் |
| 15 | | நண்பகல் 12 மணி | ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் | துரை சண்முகம் மஹால், அக்ரஹாரம் |
| 16 | | பிற்பகல் 2 மணி | கந்திலி தெற்கு ஒன்றியம் | ஸ்ரீ வள்ளி மஹால், கெஜல்நாயக்கன்பட்டி |
| 17 | 04.09.24 - புதன் | காலை 9.30 மணி | திருப்பத்தூர் நகரம் | SRK கன்வென்சன் ஹால், திருப்பத்தூர் |
| 18 | | காலை 11 மணி | திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் | சுந்தரம் மஹால், வெங்கலாபுரம் |
| 19 | | நண்பகல் 12 மணி | கந்திலி கிழக்கு ஒன்றியம் | நாராயிணி மஹால், கசிநாயக்கன்பட்டி |
| 20 | | பிற்பகல் 2 மணி | கந்திலி மத்திய ஒன்றியம் | GSR மஹால், நந்தனம் காலேஜ் ரோடு |
| 21 | | பிற்பகல் 3.30 மணி | கந்திலி மேற்கு ஒன்றியம் | செல்வி சந்திரன் மஹால், காக்கங்கரை |
| 22 | | மாலை 4.30 மணி | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் | நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய அலுவலகம். |
| 23 | | | நாட்றம்பள்ளி பேரூர் | |

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**
செயலாளர், திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.



கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் ராஜேஷ்குமார் தொகுதிக்குட்பட்ட கருங்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டு மாணவர்களின் திறமைகளை பாராட்டி, ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். அப்பள்ளியில் நடைபெற்ற நன்னெறி வகுப்பில் மாணவர்களோடு அமர்ந்து மாணவர்கள் சொல்லிய நன்னெறி கதைகளைக் கேட்டு பாராட்டினார். தொடர்ந்து விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் தாரகை கஸ்பர் தொகுதியிலும் ஆய்வு மேற்கொண்டார். மொழி சிறுபான்மையினர் அதிகம் வசிப்பதால் இப்பள்ளியில் மலையாள வழிக்கல்வி முறையிலும் பயிற்றுவிக்கப்படுகின்றது. மலையாள வகுப்பறையில் அமர்ந்து கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளைப் பார்வையிட்டார். அதே பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அரசு தொடக்கப் பள்ளியிலும் ஆய்வு மேற்கொண்டு, ஆசிரியப் பெருமக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். இதுவரை 179 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

# திருப்பூர் தெற்கு மாவட்டம் - ஒன்றிய, நகர, பேரூர்க் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு. கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் எனது (இல.பத்மநாபன்) தலைமையிலும், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் கீழ்க்கண்ட பட்டியல்படி நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம், அந்தந்த பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன் றஉறுப்பினர்கள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் - முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழகத் தோழர் கள் தவறாது கூட்டத்தில் கலந்துகொண்டு, கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

| சட்டமன்ற தொகுதி | நாள் / நேரம் | ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 125 உடுமலைப்பேட்டைசட்டமன்றதொகுதி | 02.09.2024 (திங்கள்) காலை10.00 | பொள்ளாச்சி தெற்கு (வடக்கு) ஒன்றியம் | ஸ்ரீசண்முகமஹால், உடுமலைசாலை, திப்பம்பட்டி. |
| | | பொள்ளாச்சி தெற்கு (மத்தியம்) ஒன்றியம் | |
| | | பொள்ளாச்சி தெற்கு (தெற்கு) ஒன்றியம் | |
| | | சூளேஸ்வரம்பட்டி பேரூர் | |
| | | சமத்தூர் பேரூர் | |
| | | ஜமீன் ஊத்துக்குளி பேரூர் | |
| | 02.09.2024 (திங்கள்) மதியம் 12.00 | குடிமங்கலம் மேற்கு ஒன்றியம் | G.K.மஹால், பெதப்பம்பட்டி. |
| | | குடிமங்கலம் கிழக்கு ஒன்றியம் | |
| | | குடிமங்கலம் வடக்கு ஒன்றியம் | |
| | 02.09.2024 (திங்கள்) மாலை 5.00 | உடுமலைப்பேட்டை நகரம் | நகரகழகஅலுவலகம், உடுமலைப்பேட்டை. |

**இல.பத்மநாபன்**
செயலாளர்
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

## பண்ருட்டி ஒன்றியம்

# பேர்பெரியான்குப்பத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

### சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

*பண்ருட்டி, செப். 1-*

*பண்ருட்டி ஒன்றியம் பேர்பெரியான்குப்பம், விசூர், வீரசிங்கன்குப்பம், காட்டுக்கூடலூர், மேல்காங்கேயன்குப்பம் ஆகிய ஊராட்சி மக்கள் பயன் பெறும் வகையில் தமிழக முதல்வரின் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 15 துறைகள் ஒருங்கிணைந்து ஊரகப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று ஆன்லைன் மூலம் உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில் கோரிக்கை மனுக்கள் பெறும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் பேர்பெரியான் குப்பம் பள்ளியில் நேற்று முன்தினம் நடந்தது. முகாமிற்கு நெய்வேலி சபா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். முகாமிற்கு ஒன்றிய குழு தலைவர் சபா.பாலமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கர், சக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். டாக்டர்கள் அறிவொளி, சுப்பிரமணிய சிவா, வேளாண்மை உதவி இயக்குனர் டாக்டர் பார்த்த சாரதி, மாவட்ட கவுன்சிலர் ஜெகநாதன், தலைமை ஆசிரியை கிரிஜா, தி.மு.க. நிர்வாகிகள் ராஜா, செல்வகுமார், ஆடலரசு, ஆசைத்தம்பி, பழனி, சிகாமணி, பரமசிவம், ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் செந்தாமரை, ஞானசேகர், அருள் முருகன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சக்கரவர்த்தி, சாந்திபாலகிருஷ்ணன், தேசிங்கு, அம்பிகாகுமார் துணைத் தலைவர் சசி, சாமிதுரை, ராஜேஷ், ஜெயக்குமார், பாரி, குமார், பூபதி, சிவமுருகன், அரிகிருஷ்ணன், அண்ணாமலை, கார்த்திகேயன், சிவகுமார், செல்வகுமார், பாலகிருஷ்ணன், மாயவேல், ஊராட்சி செயலாளர் வடிவேல், செல்வராஜ், லட்சுமி பிரியா, ராஜேந்திரன், சந்தோஷ்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தி.மு.க. ஒன்றிய, ஊராட்சி, கிளை நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.*



பண்ருட்டி ஒன்றியம் பேர்பெரியான் குப்பத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் சபா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஊனமுற்ற சிறுவர் சிறுமிகளுக்கு மூன்று சக்கரவண்டி வழங்கினார். அருகில் யூனியன் சேர்மன் சபா.பாலமுருகன், தாசில்தார் ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.

## செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர்

# எல்.மணிமாறன் மறைவு!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

*சென்னை, செப். 1-*

*செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர் எல். மணிமாறன் மறைவுக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனின் இரங்கல் செய்தி வருமாறு:-*

*செய்தி மக்கள் தொடர்புத்துறையின் முன்னாள் இணை இயக்குநர் எல். மணிமாறன் அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து நேரத்தில் அவரது அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் - செய்தி மக்கள்தொடர்பு துறையில் பல்வேறு பொறுப்புளிலும் திறம்படப் பணியாற்றியவர். அவரது மறைவால்வாடும் குடும்பத்தினருக்கும் - அவருடன் பணியாற்றிய சக செய்தி மக்கள் தொடர்புத்துறை பணியாளர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.*




மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் செம்பனார்கோயில் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், மருத்துவர் வீரப்பாண்டியன் மற்றும் பலர் பங்கேற்றனர்.